**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 11 January 2022

## எஸ்ஐஏ-தேசிய பல்கலைக்கழக புதிய ஆய்வகத்தில் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆய்வு

# விமானப் பயணத்தின்போது பயணி சுகமாக தூங்க வழி



எஸ்ஐஏ - என்யுஎஸ் புதிய ஆய்வகத்தில் உள்ள பயணி பாவனைக் கூடத்தில் துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கெண்ட் ரிட்ஜ் வளாகத்தில் எஸ்ஐஏ-என்யுஎஸ் மின்னிலக்க விமானப் போக்குவரத்து நிறுவன ஆய்வுக்கூடம் என்ற புதிய ஒரு சோதனைச்சாலை அமைக்கப்பட்டு உள்ளது.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனமும் (எஸ்ஐஏ) இந்தப் பல்கலைக்கழகமும் சேர்ந்து $45 மில்லியன் செலவில் அமைத்துள்ள அந்த ஆய்வகம் நேற்று தொடங்கப்பட்டது. துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் அதைத் தொடங்கி வைத்தார்.

விமானத்தில் பயணம் மேற்கொள்ளும்போது பயணிகள் அதிக தூக்கத்தை, சுகத்தை, வசதியை அனுபவிக்க ஏதுவாக பல புத்தாக்க ஏற்பாடுகளை உருவாக்கும் வழிகள் பற்றி அங்கு ஆராயப்பட்டு வருகிறது.

விமானத்தில் வர்த்தக வகுப்பு, மலிவுக் கட்டண பயணிகள் அமர்ந்து செல்லும் கூடத்தைப்போல் பாவனையாக அங்கு ஒரு பகுதி அமைக்கப்பட்டு உள்ளது.

விமானம் பறந்து செல்லும்போது பயணிகள் எந்த நேரத்தில் எப்படி தூங்குகிறார்கள் என்பது பற்றிய ஆய்வுகள் அங்கு துல்லியமாக மேற்கொள்ளப்படும்.

விமானத்தில் பயணிகளைச் சாப்பாட்டுக்கு எந்த நேரத்தில் எழுப்புவது உசிதமானதாக இருக்கும் என்பதை இந்த இரண்டு அமைப்புகளையும் சேர்ந்த ஆய்வாளர்கள், ஒன்றாகச் சேர்ந்து ஆய்வுக் கூடத்தில் ஆராய்வார்கள்.

ஒவ்வொரு பயணியின் ஓய்வு நேரத்தைக் கணக்கில் கொண்டு ஒவ்வொருவருக்கும் ஏற்ற ஏற்பாடுகளைக் கண்டுபிடித்து செயல்படும் முறையைக் காணவும் அவர்கள் முயல்வார்கள்.

ஆய்வுக் கூடத்தில் 70க்கும் மேற்பட்ட ஆய்வாளர்களும் முனைவர் கல்வி மாணவர்களும் ஆய்வுகளில் ஈடுபடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த ஆய்வுகள் வெற்றிபெறும் பட்சத்தில், விமானப் பயணத்தின் போது பயணிகள் விமானத்தில் சுகமாக எப்படி எல்லாம் ஓய்வு எடுக்கலாம் என்பது பற்றி எதிர்கால எஸ்ஐஏ விமானப் பயணிகளுக்கு அதிக தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

விமானிகள், விமான ஊழியர்கள் ஆகியோருக்கான பயிற்சிகளை தொழில்நுட்பங்கள் மூலம் மேம்படுத்துவதும் புதிய ஆய்வகத்தின் இலக்கு என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, புதிய ஆய்வகத்தைத் தொடங்கிவைத்துப் பேசிய துணைப் பிரதமர், கொவிட்-19 சூழலிலும் எஸ்ஐஏ நிறுவனம் தனது மின்னிலக்க முயற்சிகளை முடுக்கி விட்டு உள்ளது குறித்து மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் செயல்படும் மேலும் பல நிறுவனங்கள், இங்குள்ள பல்கலைக்கழகங்கள், ஆய்வு அமைப்புகளுடன் சேர்ந்து செயல்படுவதைப் பலப்படுத்துவது பற்றி ஆராயும் என்று தான் நம்புவதாகவும் திரு ஹெங் கூறினார்.

புதிய ஆய்வுக் கூடம் தேசிய பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏழாவது நிறுவன ஆய்வகம்.

சிங்கப்பூரின் 19வது ஆய்வுக் கூடமாகவும் அது இருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.